මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: PE/2024/17 2024.10.09

## பாராளுமன்றத் தேர்தல் - 2024.11.14

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆட்களின் பட்டியல் (தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி வேட்பாளர் பட்டியல்)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒவ்வோர் அரசியற் கட்சியினாலும்/ சுயேச்சைக் குழுவினாலும் தேசிய பட்டியலின் கீழ் தெரிவுசெய்யப்படுவதற்கு தகைமையுள்ள ஆட்களின் பட்டியலொன்று பெயர் குறித்த நியமன காலப்பகுதி அதாவது 2024.10.04 ஆம் திகதி முதல் 2024.10.11 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேசியப் பட்டியலுக்கு வேட்பாளர்களைப் பெயர் குறிக்கும் போது அனைத்து இனப் பிரிவுகளின் பிரதிநிதித்துவம் தேசிய சனத்தொகை விகிதாசாரத்திற்கு இயையவுள்ளதனை இயன்றளவு பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதோடு, போதியளவான பெண் பிரதிநிதித்துவமொன்று இன்றியமையாதது என்பதையும் கவனிக்க வேண்டும்.

தேசியப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்கள் அல்லது பாராளுமன்றத் தேர்தலில் யாதேனும் தேர்தல் மாவட்டமொன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப்பத்திரமொன்றில் பெயர் சேர்க்கப்பட்டுள்ள ஆட்கள் தவிர்ந்த வேறு ஆளெவரையும் அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிப்பதற்கு வாய்ப்பில்லை.

தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பட்டியல் ஒப்படைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்திற்கு (Anti Corruption Act) அமைய தேசியப் பட்டியலிலுள்ள அனைத்து வேட்பாளர்களும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்க வேண்டும்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்